**தலைப்பு 252 -தொகை மதிப்பு மற்றும் புள்ளிவபரவியல் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவபரவியல் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவபரவியல் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூலை 13 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஆகஸ்ட் 14 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவபரவியல் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தொகை மதிப்பு மற்றும் புள்ளிவபரவியல் திணைக்களத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணகீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சமுதாய அடிப்படை சீர்திருத்த திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் சமுதாய அடிப்படை சீர்திருத்தத் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்த அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான கருத்துரைகள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) பின்வரும் அவதானிப்புக்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் இணங்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆதனம் பொறி மற்றும் இயந்திரங்களுக்கான கடந்த வருடத்தின் இறுதியில் காணப்பட்ட மதிப்பு மற்றும் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட மதிப்பு என்பவற்றுக்கு இடையே ரூபா 2.938,255,133 ஆன வேறபாடு அவதானிக்கப்பட்டது. | 2020 ஆம் வருடத்தில் மாவட்ட புள்ளிவிபரவியல் பிரிவுகளால் கொள்வனவு செய்யப்பட்ட நிதியல்லாச் சொத்துக்கள் மற்றும் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தினால் 252-1-1-2102 அல்லது 252-1-1-2103 செலவு விடயங்களின் கீழ் அன்றி ஏனைய மூலதனச் செலவு விடயங்களின் கீழ் திணைக்கள பராமரிப்பிற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 23,599,984 பெறுமதியான நிதியல்லாச் சொத்துக்கள் ஆரம்ப மீதியாகக் கணக்கிடப்பட்டிருந்தது. | கடந்த வருடத்தில் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட சொத்துக்களின் மிகுதி மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். அவை வேறுபட்டால் அது நிதிக் கூற்றுக்களில் வெளிக்காட்டப்படுதல் வேண்டும். |

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் திருத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்தவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 07 மீண்டெழும் செலவு விடயங்கள் மற்றும் 09 மூலதனச் செலவு விடயங்களுக்காக மொத்தம் ரூபா 394.87 மில்லியன் மேலதிக ஒதுக்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தமையால் அந்த ஒதுக்கங்கள் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் ரூபா 218.51 மில்லியன் ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டிருந்தன. அச் சேமிப்பு ஏற்படுத்தப்பட்டிருந்த தேறிய ஒதுக்கங்களில் நூற்றுக்கு 20 இலிருந்து நூற்றுக்கு 70.42 வீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது. | சுற்றறிக்கை எல்லைகளுக்கு இணங்கியமை, கட்டிட திணைக்களத்தின் மதிப்பீட்டைப் பெறுவது தாமதாமாகியமை, கட்டு நிதி கிடைக்காமை, ஒதுக்கங்கள் வருட இறுதியில் பெறப்பட்டமை போன்ற விடயங்கள் இதற்குக் காரணமாகும். | வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்படுகின்ற மூலதன ஒதுக்கங்கள் செயற் திறனாகப் பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை திட்டமிடல் வேண்டும். |
| (ஆ) | இலக்கம் 252-1-8-2507(13) ஆன செலவு விடயத்தின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1,273,000 ஆன முழுமையான ஒதுக்கங்களும் சேமிக்கப்பட்டிருந்தது. | **UNFPA** நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்ட இந்த ஒதுக்கங்கள் கொவிட் தொற்று நோய் நிலைமை காரணமாக அமைச்சர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்படாமையால் சேமிக்கப்பட்டிருந்தது. | வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்படுகின்ற ஒதுக்கங்களைச் செயற் திறனாகப் பயன்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை திட்டமிடல் வேண்டும். |

**2.2 அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 1991 இலிருந்து 2017 வருடம் வரையிலான காலப்பகுதியல் சேவையிலிருந்து விலகிச் சென்ற 12 உத்தியோகத்தர்களின் மொத்தம் ரூபா 553,207 ஆன கடன் மிகுதிகளை மீளாய்வாண்டின் இறுதி வரையில் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வசிப்பிட நிலையங்களைக்கண்டு பிடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் மற்றும் சட்டமா அதிபரினால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டி இல 01 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 04 மரணித்த அதிகாரிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மிகுதிகளின் கூட்டுத்தொகை மொத்தம் ரூபா 165,450 ஆகும் | ரூபா 92,750 ஆன கடன் மிகுதி தொடர்பாக மரணப் பணிக்கொடை தயாரித்தல் தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், ரூபா 65,000 ஆன கடன் மிகுதியை அறவிடுவதற்காக மரணப் பணிக்கொடையின் குறைபாடுகள் திருத்தப்பட்டு 2020.06.17 ஆந் திகதி ஓய்வூதியத் திணைக்களத்திற்கு குறித்த கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டி இலக்கம் 01 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2019 செப்டெம்பர் மாதம் ஓய்வூதியம் பெற்றுச் சென்ற 03 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தம் ரூபா 289,219 ஆன கடன் மிகுதி 2020 திசெம்பர் 31 வரையில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஓய்வூதியப் பணிக்கொடை வழங்கப்பட்டதன் பின்னர் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இன் பிரகாரம் வெளியிடப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான வழிகாட்டியின் 3.4 ஆம் பந்தியின் அறிவுறுத்தலுக்கு முரணாக 2020 ஆம் வருடத்தில் ரூபா 822,836 ஆன பொறுப்புக்கள் 2021 ஆம் வருடத்தில் தீர்க்கப்பட்டிருந்தது. | உடன்படுகின்றேன். ரூபா 822,836 ஆன கொடுப்பனவுகள் 2020 ஆம் வருடத்தின் பொறுப்புக்களாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என்பதுடன் அக் கொடுப்பனவுகளுக்கான உறுதிச் சீட்டுக்கள் 2021 ஆம் வருடத்திலேயே பெறப்பட்டிருந்தன. | அரச கணக்குகள் திணைக்களத்தின் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2017 மே 04 ஆந் திகதிய 02/2017 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் மொத்தம் ரூபா 9,324,361 ஆன புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் பதிவேடுகளுக்காக 2020 திசெம்பர் 31 வரையில் பொருட் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தூரநோக்கு மற்றும் செயற்பணி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| சரியான நேரத்தில் பிழையற்ற தரவுகளை வழங்குவதன் மூலம் மிகவும் பயனுள்ளதாக சமூகப் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல் திணைக்களத்தின் நோக்கமாகும். எனினும் திணைக்களத்தின் தரவுகள் வெளியிடப்பட்ட திகதி இலக்குகளின் பிரகாரம் தரவுகள் வெளியிடப்படுவதற்கு குறிப்பிடப் பட்டுள்ள தினங்களை விட 01 மாதத்திலிருந்து 11 மாதங்கள் வரையிலான கால வீச்சானது தாமதமாகி தரவுகள் வெளியிடப்பட்டிருந்த 45 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | கருத்துரை வழங்கப்படவில்லை. | குறிப்பிட்ட திகதிக்குள் தரவுகள் வெளியிடப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 தயாரித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்தின் தொழில்நுட்ப மற்றும் சேவை இலக்கம் 15 மற்றும் விசேட பிரிவுகள் 06 இன் மூலம் 2020 ஆம் வருடத்திற்குள் குறிப்பிட்ட பணிகள் நடைபெற்றுள்ளதாக செயலாற்றல் அறிக்கையில் காட்டப்பட்டிருந்ததுடன், விசேட பிரிவின் கீழ் வருகின்ற சர்வதேச புள்ளிவிபரவியல் பிரிவு, கணக்குகள் பிரிவு, பெறுகைப் பிரிவு மற்றும் உள்ளகக் கணக்காய்வுகளின் செயற்பாடுகள் செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | வருடத்தில் அடையப்பட்ட அனைத்துப் பிரிவுகளுக்குமான செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டும். |

**3.3 செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலக்கம் 06 இற்கான இலக்கிடப்பட்ட 08 பணிகளுக்கான செயலாற்றல் எதுவும் காணப்படவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | தயாரித்ததன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலக்கம் 03 இற்கு இலக்கிடப்பட்ட 06 பணிகள் நூற்றுக்கு 50 அல்லது அதற்குக் குறைவான சதவீதத்தைக் கொண்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

**3.4 எதிர்பார்த்த விளைவு மட்டத்தை அடைந்து கொள்ளாமை**

**வெளிநாட்டு உதவிச் செயற்திட்டம்.**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வெளிநாட்டுதவிச் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 130.16 மில்லியனுக்கான 06 செயற்திட்டங்கள் இனங்காணப்பட்டிருந்ததுடன் அச் செயற்திட்டங்கள் 2018 சனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு 2020 ஆம் வருடத்தில் முடிவடைவதற்கு திட்டமிடப்பட்டிருந்தன. எனினும், அச் செயற்திட்டங்களில் எதுவும் 2020 ஆம் வருடத்தில் முடிவடைவதற்கு இயலாமை காணப்பட்டது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | திணைக்களத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்படல் வேண்டும். |

### 3.5 பெறுகை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அரசின் பெறுகை வழிகாட்டிக்கோவையின் 4.2 வழிகாட்டியின் பிரகாரம் 03 வருட காலத்திற்காகத் திணைக்களத்தினால் பிரதான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிராமையுடன் மீளாய்வாண்டிற்கான விரிவான பெறுகை திட்டமொன்று மட்டுமே தயாரிக்கப்பட்டிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | அரசின் பெறுகை வழிகாட்டி கோவைின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.6 முகாமைத்துவ பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்தின் பணிகளுக்கு மேலதிகமாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் மற்றும் மேற்பார்வை அமைச்சின் செயலாற்றல் அறிக்கைகளை அச்சிடுவதற்கான செலவுகள் தேசிய பெறுகைகள் ஆணைக்குழுவின் முன்னேற்ற அறிக்கை அச்சிடுவதற்கான செலவு மற்றும் அமைச்சின் கடித தலைப்புக்கள் அச்சிட்ட செலவு போன்ற வெளியார் நிறுவனங்களுக்காகச் செலவிடப்பட்ட அச்சீட்டு செலவுகள் திணைக்களத்தின் செலவினத் தலைப்பின் கீழ் செலவிடப்பட்டிருந்தன. | கருத்துரை வழங்கப்படவில்லை. | ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்ற சேவைகளுக்கான பணம் அறவிடப்படல் வேண்டும். |

**4. மனித வள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் நூற்றுக்கு 33 வீதம் அதாவது 619 வெற்றிடங்கள் காணப்பட்டன. இரண்டாம் நிலை அடிப்படையில் இத் திணைக்களத்தினால் விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 03 ஆகும். | கருத்துரை வழங்கப்படவில்லை. | திணைக்களத்திற்குத் தேவையான பதவிணயி சரியாக மதிப்பிடப்பட்டு மதிப்பீடுகளில் உள்ளடக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்தின் 4 உத்தியோகத்தர்கள் கல்வி நடவடிக்கைகளுக்காக அத்துடன் வேலை வாய்ப்புக்களுக்காக வெளிநாடு சென்றிருந்த போதிலும் அவர்களுக்கான கால எல்லை முடிவுற்ற போதிலும் மீண்டும் சேவைக்குச் சமூகமளிக்கவில்லை. அவர்களிடமிருந்து அரசிற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 1,126,133 ஆனது 03 வருடங்களிலிருந்து 13 வருடங்கள் வரையான காலமாக அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒரு உத்தியோகத்தர் 2005 யூன் 01 இலிருந்து 2006 திசெம்பர் 01 வரையில் பெற்றிருந்த கல்வி விடுமுறைக்காக ஒப்பந்தம் செய்து கொள்ளவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | அரசிற்கு அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த மனிதவள அபிவிருத்தி திட்டம் 2018 சனவரி 24 ஆந் திகதிய மற்றும் 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் நோக்கம் 02 இன் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் தகவல்கள் உள்ளடக்கப்பட்டு தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | மேலே (இ) இல் குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் 6.1 ஆம் பந்தியின் பிரகாரம் பதவியணியினரின் சகல உறுப்பினர்களுக்கும் குறைந்த பட்சம் 12 மணித்தியாலங்களுக்குக் குறையாத பயிற்சிக்கான சந்தர்ப்பமொன்று வழங்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தின் 481 உத்தியோகத்தர்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | வழங்கப்பட வேண்டிய மணித்தியாலங்கள் பூரணப்படுத்தப்படல் வேண்டும். |